

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்கு உட்பட்ட சாலைப்புதூர், லெக்கைன்கோட்டை, அரங்கநாதபுரம், காளாஞ்சிபட்டி, வெரியப்பூர், புலியூர்நத்தம், ஜோகிபட்டி, புளியமரத்து கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் நியாயவிலைக் கடை, பயணியர்நிழற்குடை, கலையரங்கம், அங்கன்வாடி மையம் சமுதாயக்கூடம் உள்ளிட்ட 2068.28 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார். இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 2068.28 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகள் துவக்க விழா!

# சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார் நமது முதலமைச்சர்!

## ஒட்டன் சத்திரத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம் நவ.13.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்கு உட்பட்ட சாலைப்புதூர், லெக்கைன்கோட்டை, அரங்கநாதபுரம், காளாஞ்சிபட்டி, வெரியப்பூர்,

புலியூர்நத்தம், ஜோகிபட்டி, புளியமரத்து கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் நியாயவிலைக் கடை, பயணியர்நிழற்குடை, கலையரங்கம், அங்கன்வாடி மையம் சமுதாயக்கூடம் உள்ளிட்ட 2068.28 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை துவக்கி வைத்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமின்றி, சொல்லாத பல்வேறு திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர், பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, சேமிப்பு ஏற்படுகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘புதுமைப் பெண்’ திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர் கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்னும் 10 ஆண்டுகளில் குடிசைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கும் வகையில் ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதில் நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதேபோல் தமிழ்நாட்டில் ஏற்கனவே தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்ட 2.5 இலட்சம் பழைய வீடுகளை பழுது பார்த்து வழங்குவதற்காக ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இந்த ஆண்டு கல்வித்துறைக்கு ரூ.44,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

படித்த இளைஞர்கள் போட்டித்தேர்வுக்கு தயாராக வேண்டும் என்பதற்காக மதுரை, கோயம்புத்தூர், சென்னை போன்ற நகரங்களுக்கு சென்று பயிற்சி பெற வேண்டிய நிலையை மாற்றி காளாஞ்சிப்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு போட்டித் தேர்வு பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் கடந்த தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வில்(தொகுதி 4) சுமார் 7 மாணவ, மாணவிகள் நல்ல மதிப்பெண் பெற்றுள்ளனர். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு தொகுதி 1 மற்றும் தொகுதி 2 ஆகிய தேர்வுகளில் பல மாணவ, மாணவிகள் முதல்நிலை தேர்வில் தகுதி பெற்றுள்ளனர்.

விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தொப்பம்பட்டியில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு குடிநீர் கொண்டுவர காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் வடகாடு ஊராட்சியையும் இணைக்க ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்றென்றும் ஆதரவாக, உறுதுணையாக இருக்க வேண்டும்என பேசினார்.

இந்நிகழ்ச்சியில்திட்ட இயக்குனர்திலகவதி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன் தர்மராஜ் ஒன்றியக்குழுத் தலைவர் அய்யம்மாள், துணைப் பெருந்தலைவர் காயத்ரி தேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வடிவேல் முருகன், பொறியாளர் விஜயராகவன், வட்டாட்சியர் பழனிச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ்,ஒன்றிய கவுன்சிலர்கள் சண்முகம், கண்மணி, ஒன்றிய அவைத் தலைவர் செல்வராஜ், நகர அவைத்தலைவர் சோமசுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், ராமகிருஷ்ணன், ஊராட்சி மன்றதலைவர்கள் செல்லம்மாள் தண்டபாணி, சிவராமகிருஷ்ணன், அமுதாகாமையன், சுப்பிரமணி, பூரணம், ராஜேந்திரன், தங்கராஜ் , ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் குழந்தை வேல், கௌரி சரவணன், கருணாநிதி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி முருகானந்தம், மாவட்ட மாணவரணி துணைஅமைப்பாளர் சுரேஷ் குமார் உள்ளிட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆலோசனையின்படி மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட எல்லிஸ் நகர் பகுதி வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றதில் தலைமை கழக பொறுப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி.ராஜன் சிறப்புரையாற்றினார். உடன் பகுதி செயலாளர் பி.கே.செந்தில், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சுபாலு, மாவட்ட துணை செயலாளர் சின்னம்மாள், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணிமாறன், வைகை பரமன், மத்திய மண்டல தலைவர் பாண்டி செல்வி, வட்டச் செயலாளர்கள் அழகு சுந்தரம், மணிகண்டன், சுரேஷ், மாணிக்கம், மாமன்ற உறுப்பினர்கள் மகாலட்சுமி, பாமா முருகன், செல்வி செந்தில், ஆதிதிராவிடர் அணி ரியல் பாலா மற்றும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பாக மதுரை யா.ஒத்தக்கடையில் நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டு விழாவினை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து பரிசுகள் வழங்கினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இலக்கிய அணி நேருபாண்டியன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, தலைமைச் செயற்குழு வடிவேல் முருகன், ஒன்றிய செயலாளர்கள் மதிவாணன், சிறைச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

# மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சிப்பணிகள்!

## அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு!

திருவாரூர், நவ13 -

திருவாரூர் மன்னார்குடி சட்டமன்ற தொகுதிப்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் மக்களுக்கான நலத்திட்ட வளர்ச்சிப்பணிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா ஆய்வுகளை மேற் கொண்டார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா மன்னார்குடி சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்றுவரும் மக்கள் திட்டங்களை குறித்து ஆய்வுகள் மேற்கொண்டார். திருமக் கோட்டை, வடுவூர், மன்னார்குடி நகர பகுதிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சிப்பணிகள் மற்றும், கழக நிகழ்வுகளில் பங்கேற்றார்.

திருவாரூர் மாவட்டம், திருமக்கோட்டை திருமேனிஏரியில் பகுதியில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டித்தல்களின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 43 நரிக்குறவர் சமுதாயம் மக்களின் குடும்பங்கள் பயன்பெறும்வகையில் ரூ.218.01 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவருகிறது. ஒவ்வொரு வீடும் ரூ.5.07 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டின் முகப்பு, தனியறை, கழிவறை, சமையலறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுவரும் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

மன்னார்குடியில் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் வடசேரி முக்கத்தில் அமைக்கப் பட்டுள்ள கலைஞர் நூலகத்தை திறந்து வைத்த அங்கு நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் முதல்வரின் தலைமையில் கழக அரசின் சாதனைகளையும் இளைஞர் அணியின் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் சேவைகளையும் எடுத்துக்கூறினார்.

பின்னர் வடுவூரில் நடைபெற்ற அப்பகுதி மக்களின் தேவைகளுக்கான கழக நிர்வாகி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பி.ஜி.ஆர்.ஆர். ராஜாராமன் அவர்களின் மருத்துவமனை திறப்புவிழாவில் பங்கேற்று, மருத்துவமனை ஏழை எளிய மக்களுக்கு தொடர்ந்து குறைந்த செலவில் நிறைவான மருத்துவ சேவைகளை செய்ய கேட்டுக்கொண்டார். மன்னார்குடி நகர பகுதிகளில் நடைபெறும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப்பணிகள், பாதாள சாக்கடைகளுக்கான பணிகள், புகழ்பெற்ற ஹரித்ராநதி குளத்தில் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி அமையவிருக்கும் படகு போக்குவரத்து பணிகள் ஆகியவைகளை பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் , மாவட்ட ஊராட்சிதலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஸ்ரீ, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் வி.கே.முருகானந்தம், வி.வினோத்குமார், எஸ்.கல்யாணசுந்தரம் , எம்.பி.எடிசன் தாகிர்அலி, மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன் ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பாலஞானவேல், நகர செயலாளர் வீரா.கணேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் பாரதி மோகன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7, 8 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு.

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 13/11/2024 புதன்கிழமை | காலை 9.00 மணி | 8 | ஆண்டிப்பட்டி | ஸ்ரீ பாண்டியன் மீனாட்சி திருமண மண்டபம், மின் வாரிய அலுவலகம் அருகில், எஸ்.எஸ்.புரம், ஆண்டிப்பட்டி, தேனி. |
| | மாலை 4.00 மணி | | கம்பம் | கம்பம் நா.நடராஜன் நினைவுத் திருமண மண்டபம், கம்பம், தேனி. |
| 14/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 8 | தென்காசி | ஸ்ரீ சாரதாம்பா திருமண மண்டபம், இலஞ்சி, தென்காசி மாவட்டம். |
| | மாலை 4.00 மணி | | கடையநல்லூர் | எஸ்.எஸ்.கிராண்ட் மஹால், அச்சம்பட்டி பேருந்து நிலையம் அருகில், கடையநல்லூர் – தென்காசி பிரதான சாலை, தென்காசி மாவட்டம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில் இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி